ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2289/36 - 2022 ජූලි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.21

*2289/36 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி. செ. குறிப்பு இல.: DSM/YT/LAND/5/8.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/96/HA/381.

2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந்திகதிய 2272/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.09.12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு யட்டவத்தை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2022.08.29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ.ஆர்.கே. ஹேன்னாயக்க,
பிரதேச செயலாளர்,
யட்டவத்தை.

பிரதேச செயலகம்,
யட்டவத்தை,
2022, யூலை 18.

EOG 07 - 0118

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/3/119/iv.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் இல. 2266/75 மற்றும் 2022.02.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் 2A ஆம் பக்கத்தில் இல. 12 மற்றும் 13 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட நில அளவையாளர் நாயகத்தினால்

தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 530001, வலய இல. 01, பத்திர இல. 17 இன் காணித் துண்டு இல. 632 மற்றும் காணித் துண்டு இல. 633 இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் கீழ்க் காட்டப்பட்டுள்ள வாறு திருத்தப்பட வேண்டும் என்று இத்தால் அறியத்தருகின்றேன்.

*12.* **துண்டு இல. *632*- காணியின் பெயர் : கொபைஹெல வயல்; விபரம்: திறந்த சதுப்பு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம் : 0.0005 ஹெக்டயார் (பேர்ச் 0.2)**

வடக்கு: காணித் துண்டு இல. 631 உம் காணித் துண்டு இல. 634 உம்; கிழக்கு: காணித் துண்டு இல. 634, காணித் துண்டு இல. 633 உம் காணித் துண்டு இல. 01 உம்; தெற்கு: காணித் துண்டு இல. 01; மேற்கு: காணித் துண்டு இல. 631 உம் காணித் துண்டு இல. 01 உம்.

*13.* **துண்டு இல. *633*- காணியின் பெயர் : கொபைஹெல வயல், வரிப் பணம் இல. 9, நாகொட, நேபட வீதி வலயம்; விபரம்: திறந்த சதுப்பு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; முதல் உரிமை யாளர்: வரையறுக்கப்பட்ட நாகொட வடக்கு சிக்கனமான மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம்; விஸ்தீரணம் : 0.0015 ஹெக்டயார் (பேர்ச் 0.6)**

வடக்கு: காணித் துண்டு இல. 634 உம் காணித் துண்டு இல. 01 உம்; கிழக்கு: காணித் துண்டு இல. 01; தெற்கு: காணித் துண்டு இல. 01, காணித் துண்டு இல. 326 உம் காணித் துண்டு இல. 01 உம்; மேற்கு: காணித் துண்டு இல. 01 உம் காணித் துண்டு இல. 632 உம் காணித் துண்டு இல. 634 உம்.

எஸ். திரிமான்ன,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2022, யூன் 23.

EOG 07 - 0119

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/MH/09.
காணி அமைச்சின் இல.: 4-3/10/2013/LRB/458.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

*(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு, சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், தெல்கந்த கெக்குலாவலபிளேசிற்கும் கங்கொடவில வளவ்வத்த வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கைவிடப்பட்ட வயல் வெளியில் நீர்த் தடாகமொன்றை அமைத்தல், வாய்க்காலை சீர் செய்தல், நகர அலங்காரம், ஈர நிலங்களை நிர்மாணித்தல் என்பவற்றுக்கான காணி எடுத்துக் கொள்ளல்)*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மகறகமை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 526/D - ஜம்புகஸ்முல்ல கிராம அலுவலர் பிரிவில், கங்கொடவில கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.05.23 ஆந் திகதிய கொ: 9624 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 5 வரை காட்டப்பட்ட 0.2458 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட ஐந்து (05) காணித் துண்டுகள் :

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர் : புவக்கஹகும்புர; விபரம் : நீர்த் தடாகமும், நீர் தேங்கும் பிரதேசமும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஏ. டீ. கெக்குலாவல மற்றும் பீ. ஐ. கெக்குலாவல, இல. 22/6, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை, ஜீ. டீ. கெக்குலாவல, இல. 22/6A, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை, ஏ. யூ. கெக்குலாவல, இல. 22/7, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை, சீ. முனசிங்ஹ, இல. 22, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை, கே. விஜேசிங்ஹ, இல. 22/1, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை, கே. கெக்குலாவல, இல. 452/1, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை, எச். எம். வீ. கல்தேரா, இல. 173, நீலம்மகற, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம் : 0.2181 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 2**
காணியின் பெயர் : கஹட்டகஹகும்புர; விபரம் : நீர்த் தடாகமும், நீர் தேங்கும் பிரதேசமும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0081 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 3**
காணியின் பெயர் : கஹட்டகஹகும்புர; விபரம் : தெல்கந்த புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் ஒரு பகுதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0080 ஹெக்டயார்.

*04.* **துண்டு இல. 4**
காணியின் பெயர் : தெரியாது, பழைய கெஸ்பேவை வீதியில் வரி மதிப்பீட்டு இல. 26 ஐ உடைய காணியின் ஒரு பகுதி; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோரு வோர்: அநுர விஜேசிங்ஹ, இல. 26, பழைய கெஸ்பேவை வீதி, கங்கொடவில, நுகேகொடை; விஸ்தீரணம் : 0.0051 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல. 5**
காணியின் பெயர் : தெரியாது, பழைய கெஸ்பேவை வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணியின் ஒரு பகுதி; விபரம் : வீட்டுத்

தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம் : 0.0065 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு, சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும், 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் அலுவலர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக்கொள்ளல் அலுவலகம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2022, யூலை 05.

EOG 07 - 0124

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.